# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 88/2015**

பெயர்: **வெங்கடாசலம்** நாள்: 21.02.2024

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.1 – வெங்கடாசலம் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.59</u>

வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு மின் கட்டண ரசீது, வியாபாரம் சம்பந்தமான சி படிவம் மற்றும் ரசீது, கந்தாய ரசீது தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடத்திற்கான கந்தாய ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்று ஞாபகமில்லை. வீட்டு வரி, மின் கட்டண ரசீது ஆகியவற்றில் வழக்கு சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதாக என்றால், அவ்வாறான நடைமுறை இல்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 1 முதல் 4 வரையிலான ரசீதுகள் மற்றும் 6 வது ரசீது ஆகியவைகளில் எவ்வகையான வீடு என்பது குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலோ, முதன்மை சாட்சியத்திலோ கதவிலக்க எண் 3/334, 3/334-1, 3/68H உள்ளதாக கூறியுள்ளேனா என்றால், அதுபற்றி ஞாபகமில்லை. வழக்கு சொத்தானது வாய்மொழி பாகப்பிரிவினையின்படி எனது சகோதரருக்கு பிரித்து கொடுக்கப்படவில்லை என்றாலும், அவ்வாறு பிரித்து கொடுத்திருந்தால் ஆவண சாட்சியத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், சரியல்ல.

2) பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள அனைத்து ரசீதுகளும் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டவைகள் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத வேறு வீட்டிற்கான ரசீதுகளை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. உண்மையில் வழக்கு சொத்தில் வீடு இருந்திருந்தால், அதுகுறித்து முதன்மை சாட்சியத்திலும், எதிர் வழக்குரையிலும் குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.5, 6 ஆவணப்படியான மின் கட்டண ரசீதுகள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டவைகள் அல்ல என்றாலும், வேறு ஒரு சொத்திற்கு சம்பந்தப்பட்ட மின் கட்டண ரசீதுகளை வழக்கு சொத்திற்கு சம்பந்தட்டவைகளாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும், சரியல்ல. வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறு உள்ளது என்பதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில்தான் தார்சு வீடு உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தின் மூலமாக ஆணையரை நியமிக்க முயற்சி எதுவும் எடுக்கவில்லை

என்றால், சரிதான். வழக்கு சொத்தில் தார்சு வீடு, ஆழ்துளை கிணறு, மளிகை கடை ஆகியவைகள் இருந்திருந்தால் அதனை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க மனு தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தை அடமானம் வைத்துதான் வழக்கு சொத்தில் உள்ள வீட்டை கட்டினேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வழக்கு சொத்தை முழுவதும் அடமானம் வைத்துதான் வீடு கட்டினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் கூறும் அடமான பத்திரம் ஆகும். 14.07.1989 தேதியிட்ட அடமான ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் சர்வே எண் 78/5**F** ஐ அடமான சொத்தாக காட்டப்பட்டுள்ளது. நான் முதன்மை சாட்சியர் சர்வே எண் 78/5**H** ஐ அடமானம் வைத்து வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான்.

3) வா.சா.ஆ.15 ஆவணத்தை எனது தரப்பு சாட்சியமாக தாக்கல் செய்யாததற்கு காரணம் வழக்கு சொத்தை அடமானம் வைத்து வீடு கட்டாததால்தான் என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.4, 5,6 ஆவணங்கள் சர்வே எண் 78/5**F** க்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னாலும், சர்வே எண் 78/5**H** க்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்று சொன்னாலும், சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணப்படி 3½ செண்ட் நிலம்தான் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். விஸ்தீரணத்தின்படியும், சர்வே எண்ணின்படியும் அடமான சொத்து என்பது வழக்கு சொத்து அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்திற்கான செக்குபந்தி பொன்னுசாமி ரைஸ் மில்லுக்கு கிழக்கு, கிருஷ்ணன் நிலத்திற்கு மேற்கு, பொது நடைபாதைக்கும் வடக்கு, கோணகவுண்டர் நிலத்திற்கு தெற்கு ஆகும். மேற்படி செக்குபந்தி விபரமானது சர்வே எண் 78/5**F** க்கு சம்பந்தப்பட்டது என்று வா.சா.ஆ.15 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணமே நான் குறிப்பிட்டுள்ள செக்குபந்தி விபரம் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்பதை காட்டுகிறது என்று சொன்னால், சரியல்ல.

4) பட்டா மாற்றம் சம்பந்தமாக எந்த தேதியில் புகார் கொடுத்துள்ளேன் என்ற விபரத்தை முதன்மை சாட்சியத்திலும், எதிர் வழக்குரையிலும் கூறியுள்ளேனா என்றால், இல்லை. அதுசம்பந்தமாக எந்த தேதியில் யார் யாரிடம் விசாரணை செய்தார்கள் என்ற விபரத்தினையும் முதன்மை சாட்சியம் மற்றும் எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றால், சரிதான். புகார்தாரரை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்ற விபரத்தினை முதன்மை சாட்சியம் மற்றும் எதிர் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், 18.03.1992 ல் விசாரணை செய்ததாக கூறியுள்ளேன். புகார்தாரரை விசாரணை செய்ததாக முதன்மை சாட்சியத்திலும்,

எதிர் வழக்குரையிலும் கூறியுள்ளேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் புகார்தாரரையோ அல்லது என்னுடைய தகப்பனாரையோ விசாரணை செய்ததாக எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வாதியிடம் வாக்குமூலம் பெற்றதாக கருப்பு மையில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். மையில் எழுதியதற்கான கையெழுத்து குறியீடு எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான். புகார் என்று கொடுக்கப்பட்டது என்ற விபரமும் குறிப்பிடப்படவில்லை. புகார் என்று கொடுக்கப்பட்டது என்ற விபரமும், புகார்தாரரை விசாரிக்காமலேயே பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல.

5) நான் அரசு ஊழியராக பணியில் இருந்த காரணத்தினால், செல்வாக்கை பயன்படுத்தி பட்டா மாறுதல் உத்தரவு பெற்றேன் என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணம் எதிர்மனுதாரர்களுக்கு சார்வு செய்யப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லையென்றால், சரிதான். பட்டா மாறுதல் செய்யப்பட்ட விபரம் எதிர்மனுதாரர்களுக்கு தெரியாமலேயே எனது அதிகாரத்தை பயன்படுத்தி பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.11 ஆவணப்படி என்ன தகவல் கோரப்பட்டுள்ளது என்று சொன்னால், கலைஞர் வீடு வசதி திட்டத்தின்கீழான பயனாளியான வாதியின் பெயர் விபரத்தை கோரினோம். பி.வா.சா.ஆ.11 ஆவணப்படியான சொத்து விபரம் சர்வே எண் 78/5P க்கு சம்பந்தப்பட்டதாகும். வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால்,சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால், அவருக்கு சர்வே எண் 78/5X க்கு சம்பந்தப்பட்டது என்று கூறியுள்ளார், அவர் அளித்த பட்டாவில் தாவா சொத்தான சர்வே எண் 78/5X இடம் பெறவில்லை. அவ்வாறு எந்த தகவலும் கோரவில்லை என்று சொன்னால், சரியல்ல.

6) பி.வா.சா.ஆ.12 ஆவணப்படி தகவலை மணி என்பவர் கோரியுள்ளார். நான் மணியிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் ஆவணமான தாக்கல் செய்துள்ளேன். மணி என்பவர் வாதிக்கு எதிராக அசல் வழக்கு எண் 30/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். மணி என்பவர் நான் கூறும்படி நடந்து கொள்ளும் நபர் என்பதால்தான், என்னிடம் பி.வா.சா.ஆ.12 ஆவணத்தை கொடுத்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல. மணி என்பவர் நான் கேட்டுக்கொண்டதால்தான் அசல் வழக்கு எண் 30/2015 வழக்கை வாதியின் மீது தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள தரப்பினரான பொன்னுசாமியை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் இல்லையென்பதால், அதனை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள

முடியாது என்று சொன்னால், சரியல்ல.

7) பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் வழக்கு சொத்தை தவிர எனக்கு பாத்தியப்பட்ட மற்ற சர்வே எண்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு சொத்தை தவிர மற்ற சர்வே எண்களிலும் வாதியின் தாயார் வேடக்காளுக்கு 12ல் 1 பங்கு பாத்தியம் உள்ளதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். ஆகையால் நான்தான் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் வழக்கு சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. வாதியின்மீதுள்ள வன்மத்தின் காரணமாகத்தான் பி.வா.சா.ஆ.11, 12, 13 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வாதிக்கு அனைத்து வகையிலும் இடையூறு கொடுத்து அவரது சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. ஆகையால் வழக்கு சொத்தின் பட்டா எனது பெயரில் மாற்றம் அடைந்ததால் அதற்கான கந்தாய ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி பெயரிலுள்ள சொத்தை ஏமாற்றி வாங்கியதால்தான், பட்டா மாற்றம் செய்த பிறகும் வாதி தனது பெயரிலுள்ள கந்தாய ரசீது, பட்டா ஆகியவைகள் தாக்கல் செய்து அனுபவத்தை நிலைநாட்டியுள்ளார் என்று சொன்னால், சரியல்ல.

8) வழக்கு சொத்து வாதியின் பாத்தியத்தில் இருந்து வருவதால், அதுகுறித்து தனிப்பட்ட முறையில் விளம்புகை பரிகாரம் கோர தேவையில்லை என்று சொன்னால், சரியல்ல. ஆகையால் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோர எனக்கு எந்த அருகதையும் இல்லையென்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.51</u>